ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026.02.12 |

# இலங்கையில் வதிகின்றவர்களிற்கிடையிலான வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கையில் வதிகின்றவர்கள் இலங்கை ரூபாயை விடவும் வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்கல்வாங்கல் செய்கின்ற சில நிகழ்வுகளை இலங்கை மத்திய வங்கி அவதானத்திற்கொண்டுள்ளது. இது தொடர்பில், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையில் வதிகின்றவர்களுக்கிடையில் அல்லது அவர்கள் மத்தியில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய வங்கியினால் வேறுவகையில் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என மத்திய வங்கி தெளிவுபடுத்த விரும்புகின்றது.

மேலும், இலத்திரனியல் நிதி மாற்றல் அட்டைகள் (அதாவது கடன் அல்லது பற்று அட்டைகள்) வாயிலான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக **இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயமாக மாற்றுவதன் மூலம் ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கின் வரவிற்கு உள்நாட்டு வணிகர்கள் அவர்களின் உள்நாட்டு வாடிக்கையாளர்களிடமிருந்து ஏதேனும் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அவர்களுக்கு எவ்வித அதிகாரத்தையும் வழங்கவில்லை** என்பது வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் வணிகரொருவருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள் அத்துடன்/அல்லது மத்திய வங்கியின் அதிகாரமின்றி பொருட்கள்/சேவைகளை வழங்குவதற்கு இலங்கையில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்ற எவரேனும் வணிகர் **இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையொன்றின் பின்னர் குற்றத்தீர்ப்பளித்தலின் மீது;**

- **இருபத்தைந்து மில்லியன் (ரூ.25,000,000/-) ரூபாவை விஞ்சாத அபராதமொன்றுக்கு; அல்லது**
- **ஒன்றில் மூன்று (03) ஆண்டுகளை விஞ்சாத காலத்திற்கு கடூழிய அன்றில் சாதரண சிறைத்தண்டணைக்கு; அல்லது**
- **அத்தகைய அபராதம் மற்றும் சிறைத்தண்டணை இரண்டிற்கும்.**

**ஆளாதல் வெண்டும்.**

**கடுமையான சட்டரீதியான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு இந்நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு பொதுமக்களையும் வர்த்தக சமூகத்தையும் இலங்கை மத்திய வங்கி வலியுறுத்துகின்றது.**